எல்லா குடும்பங்களிலும் இம்மாதம் முழுவதும் தவறாமல் செபமாலை செபிக்க வேண்டும். ஆலயங்களில் 10 நாட்கள் சிறப்பு செபமாலை வைப்பது நன்று.

அக்டோபா; 13 ஆம் நாள் வழக்கமாக நடைபெறுகின்ற "மிஷன் லீக்" பேரணியானது 'திருத்தொண்டுப் பணிகள்" என்ற மையச் சிந்தனையில் நடைபெறும்.

அக்டோபர் 18 ஆம் நாள் மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று திருத்தொண்டுப் பணியாளர்களுக்கும் திருத்தொண்டுப் பணிகளுக்குமாக அதன் முக்கியத்துவம் கருதி திருப்பலி மற்றும் சிறப்பு ஆராதனை நடத்துவது நன்று.

அக்டோபர் 20 ஆம் நாள் 3 ஆம் ஞாயிறு 'மிஷன் ஞாயிறு" வழக்கமான நிகழ்வுகளுடன் கொண்டாடவேண்டும். பிறபகல் பங்கு அளவில் உறவியங்கள் வாரியாக திருத்தொண்டு பணியாளர்களுக்கும் திருத்தொண்டுப் பணிகளுக்காகவும் "சங்கிலி செபமாலை" ஒப்புக் கொடுத்து செபிக்க வேண்டும்.

அக்டோபர் 27 ஆம் நாள் நான்காம் ஞாயிறன்று செபமாலைப் பவனி மறைவட்ட அளவில் இரண்டு மறைவட்டங்கள் இணைந்து வட்டார முதன்மைப் பணியாளர் தந்தையர் தலைமையில் மரியாயின் சேனைப் பொறுப்பாளர்களுடன் இணைந்து நடைபெறும்.

இந்த அட்டவணையின் படி மறைவட்டங்கள் மஞ்சாலுமூடு – ஆறுகாணி, படந்தாலுமூடு – நித்திரவிளை, சூசைபுரம் – பிலாங்காலை, ஆகிய மறைவட்டகளில் மூன்று இடங்களில் நடைபெறும்.

செபமாலைப் பவனியில் அனைத்து மக்களும் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே மறைமாவட்ட அளவில் நடைபெற வேண்டிய செபமாலைப் பவனி மறைவட்டங்கள் வழியாக நடத்தப்படுகிறது. அன்பார்ந்தவர்களே! "சிறப்புத் திருத்தொண்டு" மாதமாக அக்டோபர் மாதத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் நற்செய்தியின் வழியில் தத்தமது இறைவேண்டல்களை நிறைவு செய்ய இவ்வழிபாடுகளில் முழுமையாகப் பங்கேற்று இறைவனை உருக்கமாக

வேண்டுவோம். "இதோ உமது அடிமை" எனத் தன்னையேத் தாழ்த்தி இறைவனுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த திருத்தூதர்களின் அரசியாகிய கன்னி மரியாவின் அரவணைப்பு நம்மோடிருப்பதாக.

**அறிவிப்புகள் :**

இவ் ஆயர் திருமுகத்தோடு நமது மறைமாவட்ட ஓரிரு நிகழ்வுகளையும் உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

1. நமது மறைமாவட்டத்தில் பராமரிப்பின்றி மரணத்தருவாயில் இருக்கின்ற ஏழை மக்களின் நன்மரணத்தை முன்னிற்கண்டு மரணம் வரை அவர்களை கவனிப்பதற்கான நோக்குடன் 'மதர் தெரசா ஹோஸ்பீஸ்' என்னும் ஆதரவு சிகிட்சை மருத்துவமனையை திட்டங்களாவிளை ASMI அருட்சகோதரிகளின் இல்லத்தோடு இணைந்துள்ள கட்டிடத்தில் செப்டம்பர் 16, 2019 அன்று தொடங்கியுள்ளோம். கவனிப்பாரின்றி மரண தருவாயில் இருப்பவர்களை இனம் கண்டு உதவி செய்ய முன்வருவோம். இந்நற்சேவை நன் முறையில் நடைபெற உங்களின் உதவியையும் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

2. ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மறைமாவட்ட செயல்பாடுகளின் முழு அறிக்கையுடன் திருத்தந்தையை நேரில் சந்திப்பதோடு, புனித பீட்டர் மற்றும் பவுல் ஆகியோரின் கல்லறைக்கு வணக்கம் செலுத்த வேண்டும் எனும் திருச்சபை சட்டத்தின்படி நான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை சந்திப்பதற்காக உரோமைக்கு வந்திருக்கின்றேன். சீரோ மலபார் பேராயர் கார்டினல் ஜார்ஜ் ஆலஞ்சேரி மற்றும் சீரோமலபார் ஏனைய ஆயர்களும் உரோமையில் இருக்கின்றனர். இந்த சந்திப்பானது அக்டோபர் 3, 2019 அன்று உரோமை–யிலுள்ள வத்திக்கானில் வைத்து நடைபெறும். இறைமக்களாகிய நீங்கள் அனைவரும் எனக்காகவும் நமது மறைமாவட்டத்துக்காகவும் செபிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு திருக்குடும்ப அருட்சகோதரிகளின் நிறுவனர் அருளாளர் மரியம் தெரேசா அவர்கள் அக்டோபர் 13 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனித நிலைக்கு உயர்த்தப்படுவார். இந்நிகழ்வுகள் உரோமில் புனித பீட்டர் சதுக்கத்தில் வைத்து நடைபெறும். இதிலும் நான் கலந்து கொள்வேன். நமது மறைமாவட்டத்தில் திருக்குடும்ப அருட்சகோதரிகள் படந்தாலுமூடு காமராஜ் நகரில் வசிப்பதோடு அதன்கோடு ஆலயம், குடும்ப நல்வாழ்வு நிலையம் கல்லுவிளை மற்றும் அல்போன்சா கல்லூரி சூசைபுரம் ஆகிய இடங்களில் தங்களது சேவைகளை மறைமாவட்டத்திற்குத் தருகின்றனர். அவர்களுக்கு இவ்வேளையில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரி–வித்துக் கொள்கிறேன்.

3. நமது மறைமாவட்ட குருக்களுக்கான ஒருவார தியானம்

சங்கமத்தில் வைத்து அக்டோபர் 20 முதல் 25 வரை நடைபெற உள்ளது. இவ்வாண்டு தியான உரைகளை மேதகு ஆயர் மார் ஆன்றணி பாணயங்காடன், அதிலபாத் ஆயர், வழங்குவதோடு நமது குருக்களை ஆன்மிக வாழ்வுக்கு வழிநடத்துவார். எனவே அனைவரும் நமது குருக்களுக்காக செபிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

5. அத்தோடு மேற்கூறியவாறு 'தொடர் சங்கிலி செபமாலை'. மரியாயின் சேனை வழிநடத்தும் ஜெபமாலை பவனி மற்றும் மிஷன் லீக் பிள்ளைகளின் றாலி போன்றவற்றில் இயன்ற மட்டும் ஏராளமான மக்கள் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**என்றும் ஈசோ மெசியாவில்**

+ மார் ஜா[illegible]ர் SDB
தக்க[illegible]L ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்துப் பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

## திருத்தொண்டு ஞாயிறு

அனைத்து இறைமக்களிலும் திருத்தொண்டு ஆர்வத்தைத் தூண்டும் விதமாக திருத்தொண்டு ஞாயிறு அனுசரிக்கப்பட வேண்டும் எனத் திருத்தந்தை தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். ஈசோவின் மீட்பின் செய்தியை அனைவரிடமும் கொண்டு சேர்க்கும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு திருத்தொண்டு ஞாயிறு அக்டோபர் 20 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. "திருமுழுக்கு அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள்: உலகில் திருத்தொண்டில் ஈடுபடும் கிறிஸ்துவின் திருச்சபை" என்னும் மையக்கருத்து இவ்வாண்டு நமக்குத் தரப்பட்டுள்ளது.

## அருட்சகோதரி மரியா எப்.சி.சி மறைவு



அனைவராலும் மரியாம்மா என்று செல்லமாக அழைக்கப்பட்ட பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரியா அவர்கள் 29.09.2019 அன்று காலமானார்கள்.



# CATECHISM
# மறைக்கல்வி

> வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர். உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு.
> (திருத்தூதர் பணிகள் 2 :28 )

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் !**

**வினாத்தாள் தயாரிப்பு :-**

மறை மாவட்ட மறைக்கல்வி மாணவர்களின் முதல் பருவத் தேர்வுக்கான தமிழ் மற்றும் மலையாளம் வினாத்தாள் தயாரிக்கும் பணி செப்டம்பர் 2 திங்கட்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இயக்குநர் அருட்தந்தை பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையிலும், ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் அவர்கள் மேற்பார்வையிலும் கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து நடைபெற்றது. மறைக்கல்வி நிலையங்களிலிருந்து 5 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க அந்தந்தவகுப்புகள் கற்பிக்கின்ற 12 ஆசிரியர்களைக் கொண்டு வினாத்தாள் தயாரிக்கப்பட்டது.

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - படந்தாலுமூடு மறைவட்டம் :-**

படந்தாலுமூடு மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு படந்தாலுமூடு மறை வட்ட ஆலயத்தில் வைத்து செப்டம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பளுகல் மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை. அனில் ராஜ் அவர்கள் வருகைபுரிந்த அருட்தந்தையர்கள் மற்றும் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். அருட்தந்தை. அலெக்ஸ் புத்தேட் அவர்கள் தொடக்கத் திருவருட்சாதனங்களைப் பற்றி எளிய முறையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினார். படந்தாலுமூடு மறை வட்டத்திலுள்ள ஆசிரியர்கள் 103 பேர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். பின் கருத்தரங்கானது சுமார் 4.30 மணியளவில் படந்தாலுமூடு மறை வட்ட செயலர் அருட்சகோதரி. லிஸி மேத்தியு SH அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது இறுதியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. படந்தாலுமூடு மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த படந்தாலுமூடு மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை அனில் ராஜ் அவர்களுக்கும், படந்தாலுமூடு மறை வட்ட ஆலயத்தின் பங்குத்தந்தை

பேரருட் தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்களுக்கும், மறை வட்ட செயலர் அருட்சகோதரி லிஸி மெத்தியு SH அவர்களுக்கும் படந்தாலுமூடு மறை வட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - நித்திரவிளை மறைவட்டம்** :-

நித்திரவிளை மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நித்திரவிளை மறை வட்ட ஆலயத்தில் வைத்து செப்டம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வாறுதட்டு மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்கள் வருகைபுரிந்த அருட்தந்தையர்களையும் மற்றும் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். அருட் தந்தை. அலெக்ஸ் புத்தேட் அவர்கள் தொடக்கத் திருவருட்சாதனங்களைப் பற்றி எளிய முறையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினர். நித்திரவிளை மறை வட்டத்திலுள்ள ஆசிரியர்கள் 100 பேர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். பின்கருத்தரங்கானது சுமார் 4.30 மணியளவில் இனிதே முடிவுற்றது. இறுதியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. நித்திரவிளை மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த நித்திரவிளை மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்களுக்கும், நித்திரவிளை மறை வட்ட ஆலயத்தின் பங்குத்தந்தை. பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களுக்கும் மறை வட்ட செயலர் அருட்சகோதரி அனுபமா SD அவர்களுக்கும் நித்திரவிளை மறை வட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - ஆறுகாணி மறை வட்டம்** :-

ஆறுகாணி மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஆறுகாணி மறை வட்ட ஆலயத்தில் வைத்து செப்டம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மறை மாவட்ட இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஆறுகாணி மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை. ஆன்றணி (கொச்சு மோன்) மாடப்புரைக்கல் அவர்கள் வருகைபுரிந்த அருட்தந்தையர்களையும் மற்றும்

அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். பேரருட்தந்தை. டோபின் ஆலப்புரைக்கல் அவர்கள் மறைக்கல்வியைப் பற்றி வாழ்த்துரை கூறினார். பேரருட் தந்தை. ஜோஸி குளத்துங்கல் அவர்கள் தொடக்கத் திருவருட்சாதனங்களைப் பற்றி எளிய முறையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினர். ஆறுகாணி மறை வட்டத்திலுள்ள ஆசிரியர்கள் 85 பேர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். பின்கருத்தரங்கானது சுமார் 4.30 மணியளவில் அருட்சகோதரி. ஷீனா SH அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது . இறுதியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

ஆறுகாணி மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த ஆறுகாணி மறை வட்ட இயக்குநர் அருட்தந்தை ஆன்றனி (கொச்சு மோன்) மாடப்புரைக்கல் அவர்களுக்கும், ஆறுகாணி மறை வட்ட ஆலயத்தின் பங்குத்தந்தை. பேரருட்தந்தை. டோபின் ஆலப்புரைக்கல் அவர்களுக்கும், மறை வட்ட செயலர். அருட்சகோதரி ஷீனா SH அவர்களுக்கும், ஆறுகாணி மறை வட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இதர அறிவிப்புகள் :-

## OCTOBER - 2019

**1 October 13 Sunday - Bible Fest Writing Competitions 2019- 2020 Forane Level at 2.30 Pm – 4.30 Pm at Forane Centres**

**2 October 26 Saturday – HM Meeting at 2.30 Pm at Kalluvilai**

**3 October 27 Sunday – I st Semester Examination ( Std ½-Std XII)**

அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் !

## இளையோருக்கான உள்ளிருப்புத் தியானம்

ஆகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 2 வரை தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. தியானத்தை மார்த்தாண்டம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஸ்டீபன் அவர்கள் வழிநடத்தினார்.

நிகழ்வை நித்திரவிளை இயக்குநர், அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் அவர்கள் ஆகஸ்ட் 30, மாலை 7 மணிக்குத் தொடங்கி வைத்தார். தியானத்தின் மூன்றாள் நாள் திங்களன்று மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பங்கேற்று திருப்பலி ஒப்புக்கொடுத்து, பங்கேற்றோர் அனைவருக்கும் செபமாலை வழங்கினார். மேலும் நிகழ்வு சிறப்பாக நடைபெற மறைவட்ட இயக்குநர்களான, அருட்தந்தை ராபின்ஸ் குழிகோடில், அருட்தந்தை தோமஸ் தெக்கேத்தல, அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல், அருட்தந்தை ஜேம்ஸ் காளாகாலில், அருட்தந்தை ஜெபனேஷ் மற்றும் அருட்தந்தை சுபின் ஸ்கரியா ஆகியோர் பெரிதும் உதவினர். தியானத்தினிடையே பல அருட்தந்தையர் வருகை புரிந்து உதவினர். தியானத்தில் 30 பேர் பங்கேற்றனர். மிகவும் அனுபவம் மிக்கதாக இருந்த தியானம் சிறப்புற நடைபெற உதவிய அனைவருக்கும் குறிப்பாக, அருட்சகோதரி எலைசா எப்.சி.சி அவர்களுக்கும், சங்கமம் இயக்குநர் அருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் அவர்களுக்கும், இளையோர் இயக்க நடுவண் செயற்குழுவிற்கும் நன்றிகள். தியானம் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது.

## ஆயருடன் ஒரு நாள் மற்றும் ஓணப்பண்டிகை

செப்டபர் 15 ஆம் தேதி, ஓணப்பண்டிகை அன்று ஆயருடன் ஒருநாள் என்னும் சிறப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் ஏறக்குறைய 30 பேர் பங்கேற்றனர். 'அத்தப்பூ' அலுவலகத்தின் முன்னால் போடப்பட்டது. ஆயர் அவர்கள் சுமார் அரை மணிநேரம் இளையோரோடு கலந்துரையாடினார். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. ஆயர் அவர்கள் இளையோரோடு அமர்ந்து உணவு உண்டது பெரும் மகிழ்ச்சியை அளித்தது. ஆயர் அவர்கள் இளையோரின் முக்கியத்துவம் குறித்து, விசுவாச வாழ்வில் ஆழப்படுதல் குறித்தும் பேசினார். நிகழ்வில், அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல், அருட்தந்தை ஜெபனேஷ் மற்றும் அருட்தந்தை சுபின் ஸ்கரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அலகு சந்திப்பு

அலகு சந்திப்பு தற்போது நடைபெற்று வருகிறது. சந்திப்பின் இறுதியில் நவம்பர் 02, 2019 அன்று மறைமாவட்ட, மறைவட்ட மற்றும் அலகுகளின் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி பாசறை நடைபெறும். இளையோருக்கு ஒத்துழைப்புத் தரும் மறைவட்ட இயக்குநர்களுக்கும் அருட்தந்தையர் அனைவருக்கும் இயக்குநர் தந்தை சார்பாக நன்றிகளை சமர்ப்பிக்கிறோம்.

**ஷீஜி, செயலர்**

# சிறுமலர் MISSION LEAGUE



21-9-2019 அன்று மதியம் 2.30 மணிக்கு சிறுமலர் மிஷன் லீக் பொறுப்பாளர்கள் கூட்டம் கல்லுவிளையில் நடந்தது. அருட்தந்தை அலக்ஸ் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. தந்தை அனைவரையும் வரவேற்றார்கள். பின்னர் மிஷன் லீக் இயக்க வளர்ச்சிக்காக பல செய்திகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

1. ஆண்டு தோறும் நடத்தும் " நம்பிக்கை நடைபயணம் " அக்டோபர் 13 ம் தேதி மதியம் 2 மணிக்கு கல்லுவிளை-யிலிருந்து பிலாங்காலை புனித குழந்தை தெரேசாள் ஆலயத்திற்கு செல்வதாக தீர்மானிக்கப்பட்டது. இதில் ஏதாவது மாற்றம் உண்டு என்றால் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.
2. நம்பிக்கை நடைபயண மையச் சிந்தனை "மறைபரப்புப் பணி" (மிஷன்) அதாவது நமது சமுகசேவை, மிஷன் தளங்களின் வளர்ச்சி பற்றியதாக அமைய வேண்டும்.
3. மிஷன் லீக் உறுப்பினர்களுக்காக விடுமுறை தியானம் நடத்துதல், மறைவட்ட அளவில் கருத்தரங்கு, தியானம், ஆற்றுப்படுத்துதல் நடத்துதல்,
4. வளர்ந்து வரும் மறைபரப்புத் தளங்கள் பார்வையிடல், அவர்களுக்காக ஜெபித்தல்
5. பங்குகளில் நடைபெறும் மிஷன் லீக் இயக்க வளர்ச்சியைப் பார்வை-யிட ஒரு குழு நியமிக்கப்படுவர். அதற்காக ஒவ்வொரு பங்கிலிருந்தும் மறைக்கல்வி 12-ம் வகுப்பு முடித்தவர்களை தேர்வு செய்து அவர்களின் பெயர்களை மறைவட்ட இயக்குநரிடம் கொடுத்து அவர்கள் மறைமாவட்ட இயக்குநரிடம் ஒப்படைத்தல். இவர்களுக்காக ஒரு சிறப்பு வகுப்பு மேதகு ஆயர் தலைமையில் நடத்துதல். மேலும் பல கருத்துக்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர் ஆசிரியை திருமதி லதா அனைவருக்கும் நன்றி கூற இறுதி ஜெபத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

**ஈசோவில் என்றும் அன்புடன்**
**Fr. அலெக்ஸ் புத்தேட்**
**இயக்குநர்**



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது அடிமைகள் மற்றும் மனநோயளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கு மேற்பட்ட மது நோயாளிகளும் மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை 3 நாட்கள் நடைபெறும். இம்முறை அக்டோபர் மாதம் 11, 12, 13 ஆகிய 3 நாட்களும் பயிற்சி நடைபெறும். பயிற்சி 11 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்து 13 ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு பெற்றோர்களுக்கான பயிற்சியுடன் நிறைவு பெறும். பயிற்சி கட்டணம் ரூபாய் 750 ஆகும். இடம் தக்கலை சங்கமம்.

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

---

## கல்லுக்கெட்டி-குழித்துறை புனித பிலிப் திருத்தொண்டு மையத்தில் முதல் திருமுழுக்குகள்

காட்டுவிளை-குழித்துறை திருத்தொண்டுத் தளமானது 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஏறக்குறைய 25 பேர் ஞாயிற்றுக்கிழமை செபவழிபாடுகளிலும் திருப்பலியிலும் பங்கேற்று வருகின்றனர். சுமார் 7 ஆண்டு கால திருத்தொண்டுப்பணிகளின் கனியாக, செப்டம்பர் 8, 2019 அன்று 7 நபர்களுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது. அருட்தந்தை பென்சி முண்டுநடைக்கல், அருட்தந்தை தோமஸ் ஜெபனேஷ் (கல்லுக்கெட்டி திருத்தொண்டுப் பங்கு பொறுப்பு அருட்தந்தை), மற்றும் அருட்தந்தை அனில் ராஜ் ஆகியோர் அன்றைய திருமுழுக்கு திருச்சடங்குகளை வழிநடத்தினர்.




# தக்கலை மத்திய சபை

## ஆறுகாணி வட்டாரசபை ஆண்டுவிழா

ஆறுகாணி வட்டாரசபையின் 21-வது ஆண்டுவிழானது ஆறுகாணி திருக்குடும்ப ஆலயத்தில் வைத்து 29-09-2019 அன்று காலை மத்தியப்பேரவைத் தலைவர் சகோதரர் ஜயாத்துரை மற்றும் மத்தியப்பேரவைத்துணைத்தலைவர் சகோதரர் சௌந்தராஜ் அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்றது.

## திருப்பலி

காலை 9-45 மணிக்கு ஆறுகாணி திருக்குடும்ப ஆலய துணைப்பங்குத்தந்தை அருட்தந்தை குரியன் கோயிப்புறம் அவர்கள் வின்செந்தியர்களுக்கான ஆடம்பரத்திருப்பலி நிறைவேற்றினார். திருப்பலியில் மறையுரையின் போது 'நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று' என்று கேட்டுக்கொண்டார். அவர் திருப்பலியில் அனைத்து விந்செந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் சிறப்பாக செபித்தார். திருப்பலிக்குப்பின் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

## தியானம்

ஆறுகாணி திருக்குடும்ப ஆலய பங்குத்தந்தையும், ஆறுகாணி வட்டாரசபையின் ஆன்மீக ஆலோசகருமான அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல் அவர்கள் தியானம் நடத்தினார்கள். அவர் தம் உரையில் "வின்செந்தியர்களாகிய நாம் தினமும் திருப்பலியில் பங்குகொள்ள வேண்டும், கிறிஸ்தவர்களாகிய நாம் திருப்பலி வழியாக கிறிஸ்துவை கண்டு பேச முடியும் ஆகவே நமக்கு முதலாவது தேவை தூய திருப்பலி' என்று கூறினார்.

மேலும் அவர் தமது உரையில் "நமது ஒவ்வொரு வீடுகளிலும் குடும்ப ஜெபம் கட்டாயம் இருக்க வேண்டும். நாம் உயிருள்ள விசுவாசத்தோடு இருக்கவேண்டும். ஒரு விதை நாம் மண்ணில் ஊன்றுகிறோம். அவ்விதை முளைத்து பூத்து காய்த்து கனி தருவது போல் நாமும் இருக்க வேண்டும், அவ்வாறு இல்லை என்றால் நாம் பிணவறைக்குள் இருக்கும் பிணத்திற்கு சமம். நாம் நம்பிக்கையோடு ஒரு செயல் செய்ய வேண்டும் அதுவே தந்தை கடவுளுக்கு உகந்ததாகும். நாம் விசுவாசத்தோடும் பக்தியோடும் தூய திருப்பலியில் பங்கு கொள்வதுபோல் நமது பிள்ளைகளையும் விசுவாசத்தில் வளர்த்து வரவேண்டும்" என்றும் கூறினார்கள். பின் அவர் "முற்காலங்களில் நாம் கூட்டத்தில் எப்படி

செயல்பட்டோம் இப்போது இப்படி செயல்படுகிறோம்?" எனக் கேட்டார். அதற்கு சகோதரர் தாமஸ் பத்துகாணி அவர்கள் "முன்னர் வீடு சந்தித்தல், நோயாளிகளை சந்தித்தல் என செயல்பட்டு வந்தோம். ஆனால் தற்போது கூட்டம் மட்டுமே முக்கியம் எனும் சூழல் உருவாகியுள்ளது" என்றார்.

சகோதரர் சுந்தர் அவர்கள் கூறும் போது, 'வின்செந்தியர் கையேடு வாசித்து அதன்படி நடந்து, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு செயல்பட்டு வந்தால் இனியும் முற்காலத்தை விட நல்ல முறையில் செயல்படலாம்" என்றும் கூறினார். சகோதரர் ஜோஸ் பெருமன அவர்கள் "முன்னழீபீ பொருளாதார வசதி குறைவாக இருந்தாலும் நேரம் இருந்தது. தற்போது, இப்போது பொருளாதார வசதி கிடைத்திருக்கிறது. நேரம் குறைவாக இருந்தாலும் நன்முயற்சிகளை முன்னெடுப்பதில் பின்வாங்கக் கூடாது" என்றார். சகோதரி றோசம்மா அவர்கள் 'முன்னால் ஒரு நோயாளியைப் பார்க்க சென்றால் அங்கு ஜெபம் செய்து வருகிற பழக்கம் உண்டு. அது தற்போதும் தொடர்கிறது' என்றார். சகோதரர் டோனி அவர்கள் 'கடந்த காலகட்டத்தில் எல்லா பிறருதவிப் பணிகளை மனமுவந்து செய்யும் நிலை இருந்தது தற்போது அது குறைந்து வருகிறது. இனிமுதல் அவ்வாறு இல்லாமல் நல்ல முறையில் நடத்த அனைவரும் முன்வர வேண்டும்"என்று கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பேசிய அருட்தந்தை டோபின் அவர்கள் இனியும் நாம் நல்ல முறையில் செயல்பட முடியும் என நம்பிக்கை தெரிவித்ததோடு, அடுத்தத் தலைமுறைக்கு பிறரன்புப் பணிகளின் அருமையை உணர்த்தி அவர்களுக்கான பாதைகளை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**பொதுக்கூட்டம்**

சகோதரர் எபிதோமஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். வரவேற்புரையின் தொடக்கத்தில், அருட்தந்தை டோபின் அவர்கள் வலியுறுத்தியதைப் போன்று, நாம் மிகவும் உத்வேகத்துடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். வரும் ஆண்டில் பல பணிகளை விந்செந்தியர்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். வாழ்த்துரை மத்திய பேரவைத் தலைவர் ஜயாத்துரை அவர்கள் தமது வாழ்த்துரையில், "ஆறுகாணி வட்டார சபையின் கிளைசபையை சந்திக்க வாய்ப்பு கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்றார். மேலும் அவர், தந்தை அவர்கள் கூறியது போல நாம் நமது கடமைகளை கண் முன் வைக்க வேண்டும். வின்செந்தியர்களாகிய நாம் வீடு சந்திக்க வேண்டும், பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும்

என்று நாம் நினைக்கிறோமோ அதையே நாம் பிறருக்குச் செய்ய வேண்டும். நாம் நமது பணியை நினைத்து பெருமை கொள்ள வேண்டாம். தாழ்ச்சி, எளிமை, அன்பு, பணிவு இவை அனைத்தும் நமக்கு தேவை. வின்செந்தியர் பணி என்பது திருச்சபையோடு இணைந்த ஒரு பணி. இந்தப் பணியை செய்ய நாம் எந்த ஒரு தயக்கமும் காட்டாமல் கருத்து வேறுபாடுகள் இன்றி செய்ய வேண்டும்" என்று கூறினார்கள்.



மத்திய பேரவை துணைத் தலைவர் சகோதரர் சவுந்தர்ராஜ் அவர்கள் திருப்பலி அர்ப்பித்த அருட்தந்தை அவர்களுக்கும் தியானம் நடத்திய அருட்தந்தை அவர்களுக்கும் வாழ்த்து கூறி கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக வளர்ச்சி இருக்கிறது என்று அனைவரையும் பாராட்டினார். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் பழமொழியுடன் வாழ்த்துரையைத் தொடர்ந்த அவர் அவர், "வின்செந்தியர்களாகிய நமக்கு இரண்டு கண்கள் சந்திப்பு மற்றும் கூட்டம். நாம் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்கவேண்டும். வின்செந்தியர் என்றாலே அது ஓர் அழைப்பு நாம் துன்பத்தில் வாடும் மக்களை காணும்போது இயேசுவை காண்கிறோம்" என்று கூறினார்கள்.

வட்டார சபைத் தலைவர் சகோதரர் எபிதோமஸ் அவர்கள் அக்டோபர் இரண்டாம் நாள் தேசத்தோடு ஒருநாள் என்ற கருத்தில் குலசேகரம் அரசு மருத்துவமனை சுத்தம் செய்யும் பணி நடைபெறும் என்றும், இதில் எல்லா வின்செந்தியர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் திருத்தொண்டாற்ற விரும்புவோர் பங்கு தந்தையிடம் கூறி அப்பணியில் பங்கேற்க வேண்டும் வேண்டும் என்றும் கூறினார்கள். சகோதரர் ஜோஸ் பெருமன இறைவனுக்கு நன்றி கூறி அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இறுதியில் புனித அல்போன்சம்மாள் பத்துகாணி அவர்களால் இறுதி ஜெபம் சொல்லப்பட்டது. பின் தந்தை அவர்களின் ஆசியோடு கூட்டமானது இனிதே நிறைவடைந்தது. இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

**இவன்**
**செயலர் லீலா பாய்**

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**மருத்துவ முகாம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமும், பளுகல் சுயஉதவிக்குழு மற்றும் ATSVS முன்சிறை மருத்துவமனையும் இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் பளுகல் புனித தோமையார் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தோமையார் ஆலய பங்குத்தந்தை ஜேக்கப் சக்கரியா அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இதில் ATSVS துணை முதல்வர் Dr. அரவிந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத் துணை இயக்குநர் அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்கள். இதில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என 142 பேர் கலந்து கொண்டனர் அவர்களுக்கு இலவச பரிசோதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது இதில் 3 மருத்துவர்கள் உட்பட 20 பயிற்சி மருத்துவர்களும்கலந்துகொண்டனர்

**அன்னை தெரேசா நலவாழ்வு மையம் திறப்புவிழா - தக்கலை ஆயர் பங்கேற்பு**

கன்னியாகுமரி சமூக சேவை நிறுவனத்தின் அன்னை தெரேசா நோய்தணிப்பு நிவாரண அலகு சார்பில் வயலின்கரையில் அன்னை தெரேசா நலவாழ்வு மையம் துவங்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினராக தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் கலந்த கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அப்போது "தக்கலை மறைமாவட்டத்தின் சமூக சேவை பணி மையமான கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் 1972 – ல் துவங்கப்பட்டு மகளிர் மேம்பாடு, குடும்ப வளர்ச்சி திட்டம், கல்வியில் மேம்பாடு அடைய செய்தல், நலம் மற்றும் நல்வாழ்வு திட்டம் வாழ்வாதாரத்தைப் பெருகச் செய்தல், பழங் குடிமக்களின் வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வளர்ச்சி போன்ற பணிகளை செயல்படுத்தி வருகின்றனர் அருட்தந்தை சஜி எலம்பாசேரில் அவர்களின் எண்ணத்தில் உதித்தது தான் இந்த அலகு. இத்தகைய பணி குமரிக்குப் புதிது. இப்பணி, சாதி மதம் பாராமல் நோயாளிகளின் நலனை மனதில் கொண்டு சிறப்பாக செயல்படுவதை நினைத்து பெருமிதம் கொள்கிறேன். பராமரிப்பின்றி படுக்கையில் கிடக்கும் நோயாளிகள் கவனிப்பாரின்றி தனிமைப்படுத்தப் படுகிறார்கள். அவர்களுக்கு சில நேரங்களில் அவசர சிகிட்சை தேவைப்படுகிறது. அத்தகைய படுக்கை நோயாளிகளை கருத்தில்

கொண்டு தான் இந்த நல்வாழ்வு மையம் துவங்கப்படுகிறது. சமுதாயத்தில் உடல் தளர்ந்து உள்ளம் சோர்ந்து பல நோய்களுக்கு ஆளான முதியவருக்கு மிகவும் தேவை அன்பும் அரவணைப்பும் தான். மனித நேயத்தோடு பாராமாரிப்பது குடும்பத்தார் மட்டுமின்றி நம் அனைவரின் கடமை. அப்போது நலமான சமுதாயம் அமையும்". என ஆயர் அவர்கள் தமது உரையில் கூறினார்

**சாந்தி பவன்**

இதில் சாந்தி பவன் இயக்குநர் அவர்களும், தக்கலை மறைமாவட்ட முதன்மைகுரு தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்களும், துணை இயக்குநர் அருட்தந்தை எபின் மற்றும் அருட்தந்தையர்கள் அருட்கன்னியர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

**கோழி வளர்த்தல்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் 'கோழி வளர்த்தல்' எனும் தலைப்பில் ஒரு நாள் பயிற்சி முகாம் கல்லுவிளை அரங்கத்தில் வைத்து செப்டம்பர் 23ம் தேதி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மத்திய விலங்குகள் பல்கலைக்கழக பேராசிரியர் மருத்துவர் செல்வராஜ் கலந்து கொண்டு பேசினார். அவர் பேசும்போது, 'கோழி வளர்த்தல் என்பது மிகவும் எளிமையாக நாமே வீட்டிலிருந்த படியே செய்யலாம். இன்றைய சூழ்நிலையில் அனைத்து சத்தும் இருப்பது பால் மற்றும் முட்டை இதனை நாம் சிறுதொழிலாக செய்ய முன்வர வேண்டும்.

'நாட்டு கோழிகள் இயல்பாகவே மிகவும் பலமானவை மழை, காற்று, அதிக வெயில் போன்றவற்றை எளிதாக தாங்கும் குணம் உள்ளவை. எனவே திறந்த வெளியில் கம்பி வேலி அமைத்து எளிதாக வளர்க்கலாம். இதற்கு "டயமண்ட் கிரில்" என்ற சிறிய ஓட்டைகள் உள்ள கம்பி வேலிகள் அமைப்பதன் மூலம் கோழி குஞ்சுகள் வெளியே செல்வதை தடுக்கவும் விஷ ஜந்துகள் உள்ளே வருவதும் தடுக்கலாம். பொதுவாக ஒரு ஏக்கருக்கு 2000 கோழிகள் வரை எளிதாக வளர்க்க முடியும். இதற்கு கொட்டகை என்று பெரிதாக ஒன்றும் தேவை இல்லை. மழை, வெயில் போன்றவற்றிலிருந்து ஒதுங்க சிறிய செலவிலான கூரை போன்ற கொட்டகை போதுமானது' என்று பேசினார்.

மேலும் அவர் தமது உரையில், கோழி தீவனம், நோய்த்தடுப்பு, கோழியின் வகைகள், விற்பனை முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தார். இதில் 54 நபர்கள் கலந்து கொண்டனர்

**காடை வளர்த்தல்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் காடை வளர்த்தல் எனும் ஒரு நாள் பயிற்சி முகாம் அஞ்சுகிராமம் கிறிஸ்ட் அரங்கத்தில் வைத்து செப்டம்பர் 16ம் தேதி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மத்திய விலங்குகள் பல்கலைக்கழக பேராசிரியர் மருத்துவர் செல்வகுமார் கலந்து கொண்டு காடை வளர்ப்பு

குறித்துப் பயிற்சி வழங்கினார்

**இறைச்சிக் காடை வளர்ப்பின் முக்கிய அம்சங்கள்**

காடை வளர்ப்பு தமிழ்நாட்டில் பிரபலமாகிக் கொண்டு வருகின்றது. காடைகள் பெரும்பாலும் இறைச்சிக்காக வளர்க்கப்படுகிறது. மிகக் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் ஜப்பானிய காடை வகையை வளர்க்கலாம். கோழி வளர்ப்பினைப் போன்று அதிக முதலீடு தேவை-யில்லை. இத்தொழிலில் குறைந்த மூலதனத்துடன் சிறிது பயிற்சி பெற்ற யார் வேண்டுமானாலும் ஈடுபடலாம். ஜப்பானிய காடைகளுக்கு நோய் எதிர்ப்பு திறன் அதிகம். இதனால் எந்த ஒரு தட்பவெப்ப நிலையிலும் நன்கு வளரும். கோழிகளுக்கு அளிப்பதைப் போன்று பல தடுப்புசிகள் தேவை இல்லை. காடைகள் ஐந்து முதல் ஆறு வாரத்திற்குள் விற்பனைக்கு தயாராகி விடுகின்றன. இதனால் முதலீடு செய்த குறைந்த நாட்களிலே லாபத்தை பெற முடியும். காடை ஆறுவார காலத்தில் அதிகபட்சமாக 500 கிராம் அளவே தீவனம் உட்கொள்வதால் தீவனச்செலவு அதிகமின்றி குறைந்த முதலீட்டில் காடை வளர்ப்பை மேற்கொள்ள முடியும்

காடை வளர்ப்பு முறை, கூண்டு முறை வளர்ப்பு, காடை இனங்கள், காடைத்தீவனம் இனப்பெருக்கம் குஞ்சு பராமரிப்பு, ஊட்டச்சத்துப் பற்றாக்குறை, நோய்கள், நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்கள் பற்றியும் பயிற்சி அளித்தனர். இதில் களப்பணியாளர் திருமதி செல்வம், அஞ்சுகிராமம் சுய உதவிக்குழு மகளிர் மற்றும் பொது மக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

---

## மறைமாவட்ட வெள்ளிவிழா தயாரிப்புகள்

மறைமாவட்ட வெள்ளிவிழா 2021 ஆம் ஆண்டு வரவிருக்கிறது. இதற்கான தயாரிப்புகள் குருகுல முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. இதற்காக பல கூட்டங்கள் கூட்டப்பட்டு மறைமாவட்ட மறைவட்டத் தளங்களில் விவாதிக்கப்பட்டது. வெள்ளிவிழா இறைமக்கள் அனைவரின் ஆன்ம புதுப்பித்தலுக்கான சிறந்தவொரு வாய்ப்பு என்பதை மனதில் இருத்துவோம். இறைமக்கள் அனைவரின் விருப்பத்தை ஆராய்ந்து விழாவை சிறப்பாக நடத்த வேண்டும் என்னும் நோக்குடன், கேள்விகள் தயாரிக்கப்பட்டு பங்கு வாரியாக தரப்பட்டுள்ளது. இதற்கான பதில்களை சேகரித்து வெள்ளிவிழாக் குழுவிடம் 15.10.2019 க்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும். விவாதம், உறவியப்பொறுப்பாளர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள், வின்செந்தியர்கள், மாதர் ஜோதிஸ் இயக்கத்தினர் மற்றும் இளையோர் இயக்கத்தினர் ஆகியோரிடம் நடத்தப்பட வேண்டும்.

# Educational Ministry
# கல்விப் பணி



## Ongoing Orientation Programme

அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான 2 நாள் பயிற்சி செப்டம்பர் 24, 25 ஆகிய நாள்களில் தக்கலை சங்கமத்தில் வைத்து காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்றது. ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பானது தாளாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி வகுப்பின் முதல் நாளில் ஆசிரியர்களுக்கு ஆங்கில பயிற்சி மற்றும் Cursive Writting பயிற்சி வழங்கப்பட்டது. 2 – வது நாளில் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறைகள் பற்றிய 1 மணி நேர



வகுப்பினை எளிய முறையில் புரியும் விதமாகவும் பயிற்சியை வழங்கினர். அதைத்தொடர்ந்து ஆசிரியர்களுக்கு ஆங்கில பயிற்சி மற்றும் Cursive Writting பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சி வகுப்பில் சுமார் 27 ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## கார்மல் மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கோவளம் கன்னியாகுமரி செப்டம்பர் மாத செயல்பாடுகள்

3-9-2019 அன்று அரசு ஆரம்ப சுகாதாரத்துறையிலிருந்து மாணவர்களுக்கு டிப்திரியா தடுப்பூசி போடப்பட்டது.

5-9-2019 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மாணவர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தினர். ஆசிரியர்களுக்கு விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டது. பின் அனைத்து ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர் அன்புப் பரிசு வழங்கினார்.

5-9-2019 அன்று சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அகஸ்தீஸ்வரம் சார்பாக வீட்டுக்கு வீடு பழகு ஊட்டச்சத்து உணவு என்ற கலந்தாய்வு நடைபெற்றது.

5-9-2019 அன்று Admin Day கொண்டாடப்பட்டது. அன்று ஒரு நாள் மட்டும் பள்ளி நிர்வாக பொறுப்புக்கள் அனைத்தும் பள்ளி மாணவ பேரவை தலைவர் செல்வன் ஜினோவிடம் ஒப்படைக்கப்பட்டது. XI, XII வகுப்பு மாணவர்கள் அன்று ஆசிரியர்களுக்கு ஓய்வு

கொடுத்து KG முதல் 10–ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு தாங்களே ஆசிரியர்களாக மாறி ஆசிரியப்பணியினை சிறப்பாக ஆற்றினர்.

10–9–2019 அன்று ஓணம் பண்டிகை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் அத்தப்பூ கோலமிட்டு கோலத்தை சுற்றி திருவாதிரை நடனம் ஆடி மாணவர்களை மகிழ்வித்தனர். பின் இனிப்புகள் வழங்கப்பட்டன. 17–9–2019 அன்று ஓட்டுநர்கள் மற்றும் உதவியப் பணியாளர்களின் கூட்டம் நடைபெற்றது.

21–9–2019 அன்று ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. பள்ளியின் மூன்று மாத செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பள்ளியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து திட்டங்கள் தீட்டப்பட்டன.

12 9–2019 முதல் 21–9–2019 வரை முதல் பருவத் தேர்வுகள் நடைபெற்றன.

# புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## 2019 செப்டம்பர் மாத நிகழ்வுகள்

6.9.2019 அன்று புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து மாணவர் சமூகக் களப்பணி தொடக்க விழா நடைபெற்றது. இதில சிறப்பு விருந்தினர்களாக, பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி **STAND** அமைப்பின் நிறுவனர் அருட்தந்தை முனைவர் ஜி. சகாயராஜ் ஷி.யி. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் இராஜரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், கல்லூரி முதல்வர் முனைவர் ச. இசையாஸ் ஆகியோர் வாழ்த்துக் கூறினர். இந்நிகழ்வை கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பார் P. மதன் குமார் அவர்கள் ஒருங்கிணைத்திருந்தார்.

**7.09.2019**

ஓணப்பண்டிகையை முன்னிட்டு, 7.09.2019 அன்று கல்லூரியில் அத்தப்பூ போட்டிகள், ஓண நடனம், மகாபலி சக்கரவர்த்தி போட்டி மற்றும் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. ஓணத்திருநாள் நிறைவு விழாவில் கல்லூரி செயலர், மற்றும் தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், முதல்வர் முனைவர் ச. இசையாஸ், எ.பி.ஜே.எம். பள்ளி தலைமை ஆசிரியை அருட்சகோதரி டெசி மற்றும் விமலா ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர்.

**9.9.2019**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அளவில் நீச்சல் போட்டி நடைபெற்றது. இதில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கீழ் வரும் அனைத்து கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் பங்கேற்றனர். இப்போட்டியில் சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரி மாணவர்கள் பல்கலைக்கழகம் அளவில் ஒட்டுமொத்த வெற்றிக் கோப்பையைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்

**13-09-2019**

செப்டம்பர் 15 உலக அமைதி தினத்தை முன்னிட்டு சுசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக அமைதி தினம் 13-09-2019 அன்று நாட்டு நலப்பணி திட்டம் சார்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியர் P. மதன்குமார் அவர்கள் வரவேற்புரையாற்ற, கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் ச.இசையாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**23-09-2019**

சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 23 முதல் 28 ஆகிய ஆறு நாட்கள் கதை, கவிதை, சிறுகதை, நெடுங்கதை, நாடகம் குறித்த பயிலரங்கத்தை முன்னிட்டு தொடக்க விழா நடைபெற்றது. பயிலரங்க தொடக்க விழாவில், பேராசிரியர் ஹமீம் முஸ்தபா, ஏஞ்சல் ஜெயபெலட் ராணி, கவிஞர் என்.டி ராஜ்குமார், பேராசிரியர் முனைவர் ஆர். அட்லின் ஜெபா, எழுத்தாளர் குமார செல்வா, எழுத்தாளர் ஆறணிவிளை லாசர் ஜோசப், எழுத்தாளர் அருள் சிநேகம், எழுத்தாளர் பால் ராசைய்யா, எழுத்தாளர் என். சுவாமிநாதன், பேராசிரியை டெல்பின் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்த் துறை பேராசிரியை அபஜதா அவர்கள் வரவேற்புரையாற்ற, கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமை உரையாற்றினார். சிறப்பு விருந்தினர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர். ச.இசையாஸ் அவர்கள் வாழ்த்துரை கூறினார். தொடக்க விழாவைத் தொடர்ந்து பயிலரங்கு நடைபெற்றது.

**26-09-2019**

கன்னியாகுமரி மாவட்ட அளவிலான கலை இலக்கிய போட்டிகள் திருச்சிலுவை கல்லூரியில் வைத்து நடைபெற்றது. அதில் நமது கல்லூரி மாணவர்கள் பாடல், கவிதை, ஓவியம் ஆகிய போட்டிகளில்ல் முதல் பரிசும், நடனத்தில் மூன்றாம் பரிசையும் வென்றனர்.

**28-09-2019**

23 முதல் 28 வரை ஆறு நாட்கள் நடைபெற்ற கதை, கவிதை, சிறுகதை, நெடுங்கதை, நாடகம் குறித்த பயிலரங்கத்தை முன்னிட்டு நிறைவு விழா நடைபெற்றது. இந்

நிறைவு விழாவில், பேராசிரியர் ஏஞ்சல் ஜெயலெட் என்.டி ராஜ்குமார், எழுத்தாளர், ஆறணிவிளை லாசர் ஜோசப், எழுத்தாளர் என். சுவாமிநாதன், நாடக இயக்குநர் வெளி ரங்கராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்த்துறை பேராசிரியை ஏஞ்சல் ஜெயலெட் ராணி அவர்கள் வரவேற்புரையாற்ற, கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமை உரையாற்றினார். சிறப்பு விருந்தினராகக் குமரித் தோழன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர். ச. இசையாஸ் அவர்கள் வாழ்த்துரை கூறினார்.

**பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ்**

**தாளாளர் மற்றும் செயலர்**

---

## புனித மிக்கேல் அதிதூதர் மிஷன் ஆலயம் வெள்ளாபிமலை

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்கள் முயற்சியில் திரு மரியதாஸ் ஆசிரியர் அவர்களின் ஒத்துழைப்பில் திரு.ராமையன் அவர்கள் வீட்டில் வைத்து புனித மிக்கேல் அதிதூதர் திருத்தொண்டுதளம் தொடங்கப்பட்டது. பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் தொடர்ந்து செவ்வாய், வியாழன், ஞாயிறு என வாரந்தோறும் நற்கருணை ஆராதனை, ஜெபக் கூட்டங்கள், திருப்பலி என வளர்ந்து தற்போது அது ஒரு ஆலயத்தின் கட்டமைப்பில் உருவாகி செயல்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அத்திருத்தொண்டு கட்டிடம் அருட்தந்தை வினோ டி ஜோசப் அவர்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. அக்டோபர் 29 ஞாயிறு இரவு 6.30 மணிக்கு நடைபெற்ற அர்ச்சிப்பு மற்றும் திருப்பலியில் அருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் திரு.மரியதாஸ், திரு.எட்வின்சன் மற்றும் திருமதி ஜாக்குலின் ஆகியோருடன் தடிக்காரங்கோணம் பங்கு மக்களும் பங்கெடுத்தனர். இதுவரை வழிநடத்திய அருட்தந்தையர்கள் ராபின் குறுமுள்ளில், செபி மணிமலகண்டத்தில், அனில்ராஜ், ஜாண் ஆகியோருக்கும் தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை வினோ டி ஜோசப் அவர்களுக்கும் திரு மரியதாஸ், திரு.ராமையன் மற்றும் பங்கு மக்கள் அனைவருக்கும் மறைமாவட்ட திருத்தொண்டுப் பணிக்குழு சார்பில் வாழ்த்துக்கள்.

**திரு.எட்வின்சன் செயலர்**

## அருட்சகோதரர்களிடமிருந்து...




அனைத்து சகோதரர்களும் நலமாக உள்ளனர்.

இறையியல் படிப்பிற்காக உரோமைக்கு சென்ற சகோ.ஜோர்ஜ்குட்டி அவரும் நலமாக உள்ளார். செப்டம்பர் மாத இறுதி வாரத்தில் நடைபெற்ற ஆண்டு தியானத்துடன் அவர் படிக்கும் கல்லூரியில் கல்வி ஆண்டு ஆரம்பமானது.

அனைத்து குருமடங்களிலும் Semester-ரின் இறுதி கட்டத்தில் உள்ளன. செப்டம்பர் மாத கடைசியில் தேர்வுகள் துவங்கி அக்டோபர் முதல் வாரத்தில் தேர்வுகள் முடிவடையும். அதை தொடர்ந்து அனைவரும் 10 நாட்கள் விடுமுறைக்காக வீடுகளுக்குச் செல்வர். பின்னர் ஆயரை சந்திக்க மறைமாவட்டத்துக்கு வந்து சேருவர்.

கோட்டயம் வடவாதூர் குருமடத்தில் Pastoral Course படித்து கொண்டிருந்த Dn. ஷிஜோ ஜக்கரக்குந்நேல் அவர்களின் படிப்பு முடிந்தது. செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி மறைமாவட்டத்திற்கு திரும்பிச் சென்றார். சில நாட்களில் டீக்கன் மினிஸ்டிரி துவங்குவார். திருத்தொண்டர் ஷிஜோ அவர்களுக்கு சகோதர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகள்.

செமினரி படிப்பின் இறுதி கட்டத்தில் உள்ள Comprehensive தேர்வுக்கு ஆயத்தமாகும் Dn.டோஜி Dn.ரோபின் என்பவர்களுக்கும் அனைத்து விதமான செபங்களும், வாழ்த்துகளும்.

**தலைவர்**
**சகோ ஜோஸ்**

## அருட்பணிப்பேரவை உறுப்பினர்கள்

புது அருட்பணிப்பேரவைக்கான தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில் மற்றும் திரு ஜாண் ஆகியோர் இதன் பணிகளை மேற்கொள்கின்றனர். புது அருட்பணிப் பேரவையின் முதல் கூட்டம் நவம்பர் 01, 2019 அன்று நடைபெறும். பல்வேறு துறைகளின் இயக்குநர் தந்தையர்கள் இதில் இயல்பாக உறுப்பினர்களாக இருப்பார்கள்.

# மறைவட்ட செய்திகள்




**நித்திரவிளை மறைவட்டம்**

**புனித ஜார்ஜியார் திருத்தலம் - முஞ்சிறை**

அன்னை மரியாவின் பிறவித் திருநாளுக்கு ஆயத்தமாக 1-9-19 முதல் 8-9-19 முடிய செபமாலையும் நவநாளும் திருப்பலியும் நடைபெற்றது. 6-919 அன்று செபமாலை பவனி ஆலயத்திலிருந்து புறப்பட்டு அன்பகம் சென்று இறுதி மன்றாட்டுடன் முடிவடைந்தது. ஒவ்வொரு நாளும் தேனீர் விருந்து வழங்கப்பட்டது. மக்கள் அனைவரும் மிகுந்த பக்தியுடன் ஜெபித்து அன்னை வாயிலாக அருள் பல பெற்று இல்லம் சென்றனர். மேலும் மறைவட்டத்திற்குட்பட்ட எல்லா பங்குகளிலும் 8 நாட்களும் செபமாலையும் நவநாளும் திருப்பலியும் நடைபெற்றது. 15-9-19 அன்று புனித ஜார்ஜியார் மறைகல்வி நிலைய மாணவ மாணவியரின் பெற்றோர் கூட்டம் நடைபெற்றது. சுமார் 50 பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அருட்சகோதரி அதுல்யா S.D அவர்கள் பெற்றோர் பிள்ளைகள் உறவு மற்றும் பிள்ளை வளர்ப்பு என்ற தலைப்பில் இன்றைய காலச் சூழலோடு ஒப்புமைப்படுத்தி அருமையான முறையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் சுமார் ஒன்றரை மணி நேரம் வகுப்பு நடத்தினார். பெற்றோர்கள் இருபாலரும் மிகுந்த மகிழ்ச்சியோடு பங்குபெற்றனர். இறுதியில் பெற்றோர் பிள்ளைகள் நிறை குறைகள் கலந்தாலோசிக்கப்பட்டது. மாணவர்களை இருபிரிவாகப் பிரித்து பயிற்சி நடத்தப்பட்டது. இறுதியில் தேனீர் அருந்தி மகிழ்ந்தனர்.

**நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயம்**

1-9-19 முதல் 8-9-19 முடிய செபமாலையும் நவநாளும் திருப்பலியும் நடைபெற்றது. 8 நாளும் ஒவ்வொரு பக்த இயக்கங்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மக்கள் அனைவரும் மிகுந்த பக்தியுடன் ஜெபித்து அன்னை வாயிலாக அருள் பல பெற்று இல்லம் சென்றனர்.

# செங்கோட்டை செய்திகள்

### ஆயர் சந்திப்பு மற்றும் திருத்தொண்டுப்பணியாளர் கூட்டம்

தக்கலை மறை மாவட்டத்தை சார்ந்த திருத்தொண்டுத் தளங்களில் பணியாற்றுகின்ற அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூடுகையானது 19-5-2019 அன்று மேக்கரை கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. மாலை 6.30 மணி அளவில் ஆராதனைகளுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து கூட்டமானது ஆரம்பமானது. இக்கூட்டத்தில் தங்களது வாழ்வில் வெள்ளிவிழா கொண்டாடும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் மற்றும் அருட்தந்தை தாமஸ் மூலச்சல் அவர்களை கௌரவித்து ஆயர் அவர்கள் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளையும் வழங்கி வாழ்த்துரை கூறினார். அதன்பின்பு திருத்தொண்டுத் தளங்களில் பணியாற்றுகின்ற அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் தங்களது மிஷன் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அதனை தொடர்ந்து குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் வாழ்த்துரை கூறி, மறைதள பணிகளை பாராட்டுகளை தெரிவித்தார். இறுதியில் 175 ஆண்டுகள் நிறைவுபெற்ற ஹோலிகிராஸ் துறவறசபைக்கு வாழ்த்துக்களையும் கூறினார். அத்துடன் இம்மாதம் தனது பிறந்த நாள் மற்றும் தனது பெயரைக் கொண்ட திருவிழாக்களை கொண்டாடும் அருட்தந்தை லிஜோ தெக்கேல் மற்றும் அருட்சகோதரிகள் மரியா சி.எம்.சி, மேரி லூயிஸ், மினி தோமஸ், சவுஜன்யா, எல்சிமாத்யூ சி.எம்.சி, ஜோஸி மரியா ஆகியோர்களுக்கு வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டன. இறுதியில் அருள்சகோதரி ஜெயா ஜோஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றிகளை எடுத்துக்கூறினார். பின்பு இறுதி ஆசியுடன் கூடுகை நடைபெற்றது.

### செங்கோட்டை மிஷன் வின்செந்தியர் கூட்டம்

வாஞ்சி நகர் ஆலயத்தில் 15-1-2019 ஞாயிறு காலை 10.30 மணிக்கு அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்களின் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்குகளில் செங்கோட்டை மிஷன் ஒருங்கிணைப்பாளர்

அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்கள் வின்செந்தியர் பணிகள் மற்றும் பண்புகள் குறித்து சிறந்த வகுப்பு நடத்தினார். மத்திய பேரவைத் தலைவர் சகோதரர் ஜயாத்துரை அவர்கள் அங்கு செயல்படுகின்ற கிளைச் சபைகளின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவாகக் கூறினார். மத்திய சபையின் துணைத் தலைவர் சகோ சௌந்தர்ராஜ் அவர்கள் தமது உரையில் தலைவர்கள் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் பொறுப்புகள் கடமைகள் குறித்து விரிவாகக் கூறினார். மத்திய சபை செயலர் சகோ எட்வின்சன் அவர்கள் கிளையின் செயல்பாடுகள் மற்றும் குறிப்பாக பதிவேடுகள் பராமரிப்புக் குறித்து பேசினார். நிகழ்ச்சியின் தொடக்கமாக செங்கோட்டை பக்த இயக்கங்களின் ஒ ரு ங் கி ணை ப் பா ள ர் அருட்தந்தை றோய் அவர்கள் அனைவரையும் வரவேற்றதோடு நிகழ்வினை சிறப்பாக ஒருங்கிணைத்தார் சகோ.சிஜி நன்றி கூறினார். அனைவருக்கும் அன்பின் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வினை சகோ.ஜெரோம் மற்றும் அருட்சகோதரி ஜெயா ஆகியோர் வழிநடத்தினார்கள்

அருட்தந்தை தோமஸ் தக்கலை

செங்கோட்டை திருத்தொண்டுத்தளங்களின் ஒருங்கிணைப்பாளர்

---

## BIRTHDAYS OF REV FATHERS

### BIRTH DAYS - OCTOBER 2019

| | |
|---|---|
| Fr. John Joseph | 17 |
| Fr. Kurian Mathew Koipuram | 20 |
| Fr. Augustine Thalodil | 27 |

## FEASTDAYS OF REV FATHERS

### FEAST DAYS - OCTOBER

| | |
|---|---|
| Fr. Shoji Puthenpurackal | 09 |
| Fr. Luka Kollamparampil CMI | 18 |
| Fr. Jhon Paul | 22 |

## 8 SEPTEMBER 2019
## FEAST DAY HOLY QURBANA
## KALIYAL





## 24 SEPTEMBER 2019
## FEAST DAY HOLY QURBANA
## ANNIKARAI





## 08 SEPTEMBER 2019
## FEAST DAY HOLY QURBANA
## KILLIYOOR







19 SEPTEMBER 2019
MEDICAL CENTER GOLDEN JUBILEE
CELEBRATION, KOTTAYAM
HANDING OVER KEY FOR MOTHER TERESA
PALLIATIVE CARE & HOSPICE



29 SEPTEMBER 2019, FEAST OF ST VINCENT DE PAUL
MISSION CHURCH, MARTHANDAM

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570